18.07.2025 OS.No.246/2023 PW1 Name :.**சிவக்குமார்**

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்திற்கு இன்றைய தேதிவரை பட்டா சின்னதம்பி பெயரில் உள்ளது. அது என் அப்பா ஆவார். வழக்கு சொத்து தாசில்தார் மூலமாக என் அப்பாவிற்கு வழங்கபட்ட தனிபட்ட சொத்து என்றால் சரிதான். 2011ல் என் அப்பா இறந்தார். வழக்கு சொத்தில் ஒருபகுதியை 2ம் பிரதிவாதி பெயருக்கு என் தகப்பனார் உயில் எழுதி வைத்துள்ளார் என 2ம் பிரதிவாதி பதில் போட்டுள்ளார். அதை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சரிபார்க்கவில்லை.
2. உயில் ஆவணத்தில் உள்ள சாட்சிகளை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் உயில் பற்றிய விவரம் எதுவும் தெரியாததால் அதை தெரிந்துகொள்ளவில்லை. என் அண்ணன் தாக்கல் செய்த வழக்கு மூலமாக உயில் பற்றி தெரிந்துகொண்டேன். அந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் வடபுற 2 ஏக்கர் சொத்தை 2ம் பிரதிவாதிக்கு உயில் எழுதியுள்ளதாக 2ம் பிரதிவாதி சொல்லியுள்ளார்.
3. அந்த சொத்திற்கு 2ம் பிரதிவாதி பெயரில் தனியாக உட்பிரிவு செய்யபட்டுள்ளதை மறைத்து என் அப்பா பெயரில் உள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான தற்போதைய பட்டா எதையும் போடவில்லை. அது முறையான பட்டாவாக இல்லை. 2ம் பிரதிவாதி பெயரில் தனிபட்டா ஏற்பட்டுள்ளதால் தான் அவ்வாறு கூறுகிறேன். அந்த தனிபட்டா

தவறானது என்பதற்காக வருவாய் துறை மூலமாக தனியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

4. அ.வ.எண். 117/2012 வழக்கின் தீர்ப்பு நகல் தற்போது என்னிடம் காட்டபடுவது தான் என்றால் அதை நான் பார்க்கவில்லை. என் அப்பா கிராம சிக்பந்தியாக இருந்தார். உயில் ஆவண தேதிக்கு பின் சுமார் ஒருவருடம் கழித்துதான் இறந்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் உடல்நல குறைவு தொடர்பான மருத்துவ ஆவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. உயில் சொத்து போக தான் மீதியுள்ள ஒரு ஏக்கர் கூட்டு பட்டாவில் உள்ளது என்றால் தற்போது அதை நான் சரிபார்க்கவில்லை.

5. 2ம் பிரதிவாதியின் கணவர் என்னுடைய தாய் மாமா ஆவார். மொத்த சொத்து ஆயில் கிணறு மூலமாக தான் பயிர் செய்யபட்டு வந்தது. தற்போது மின் இணைப்பு வழங்கபட்டுள்ளது. மொத்த சொத்து அந்த மின் இணைப்பை பயன்படுத்தி பயிர் செய்யபட்டு வருகிறது என்றால் மின் இணைப்பை பயன்படுத்தவில்லை. உயில் சொத்தில் தான் கிணறு பம்பு செட் உள்ளது. பம்புசெட் கிணற்றை அனுபவிப்பதில் பிரச்சனை ஏற்பட்டுள்தால் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. மீதியுள்ள ஒரு ஏக்கர் சொத்தில் 2ம் பிரதிவாதிக்கும் பாகம் உள்ளது என்றால் மொத்த சொத்திலும் 2ம் பிரதிவாதிக்கு 6ல் 1 பங்கு உள்ளது. பாகபிரிவினை செய்ய 2ம் பிரதிவாதி தடங்கலாக உள்ளதால் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன். சொத்து விவரத்தில் மின் இணைப்பு பற்றி குறிப்பிடபடவில்லை என்றால் வழக்கு போடும்போது கூறவில்லை. வழக்கிற்கு முன் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

அதற்கு காரணம் தனிபட்ட முறையில் வழக்கு போட்டுள்ளதால் கொடுக்கவில்லை.

7. 2ம் பிரதிவாதியின் பதில் பற்றி படித்து பார்க்கவில்லை. வழக்கிற்கு முன் சொத்தை பாகம் பிரிப்பதற்கு குறித்து பஞ்சாயத்து எதுவும் பேசபடவில்லை. உயில் சொத்து நீங்கலாக இதர சொத்தில் மட்டும் தான் பாகம் கேட்கமுடியும் என்றும் அதில் 2ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளது என்றால் சரியல்ல. உயில் ஆவணம் செல்லாது என பரிகாரம் கேட்கவில்லை. பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 18/07/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.07.18 16:55:41 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.